**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 12/2016 தேதி: 05.03.2025**

**பி.வா.சா. 1 – சங்கரவேல்**

**குறுக்கு விசாரணை :** ( 9, 10 பிரதிவாதிகள் தரப்பில்)

9, 10 பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்பது தெரியுமா என்றால் வாதி கேட்ட பரிகாரம் கொடுக்க கூடாது என்று கேட்டுள்ளார். வழக்கு சொத்து அருள்மிகு சுந்தர்விநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு போட்டுள்ளார். அருள்மிகு சுந்தர்விநாயகர் கோவில் மடம் என்பது ஒரு தனியார் டிரஸ்ட் என்றால் சரிதான். அந்த டிரஸ்ட் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த டிரஸ்டில் 3 நபர்கள் இருந்தார்கள். யார்யார் என்று ஞாபகம் இல்லை. வீரலிங்கசெட்டியாரும், வீரபத்திரசெட்டியாரும் உடன்பிறந்தவர்களா என்றால் சரிதான். டிரஸ்ட் குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த டிரஸ்டை நிர்வாகம் செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். என் வாக்குமூலத்திலும், எதிருரையிலும் தாவா சொத்தில் கோபுரம்தாங்கிவீரபத்திரசெட்டியாருக்கு கிரையப்பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கோபுரம்தாங்கிவீரபத்திரசெட்டியார் பெயரில் உள்ள கிரையபத்திரம் தாக்கல்செய்துள்ளேன். 1905 உள்ள கிரையப்பத்திரமாகும். என் வாக்குமூலத்தோடு எந்த ஆவணங்களும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். உறவின்முறை மூலமாக தாக்கல்செய்யப்பட்டுள்ளது. 1905 ஆண்டில் சங்கரலிங்கசெட்டியார், வீரலிங்கசெட்டியார், வீரபத்திரசெட்டியார் ஆகியோர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. வீரபத்திரசெட்டியார் மட்டும் வாங்கியுள்ளார். 1905 ஆண்டில் சங்கரலிங்கசெட்டியார், வீரலிங்கசெட்டியார், வீரபத்திரசெட்டியார் ஆகியோர்கள் சேர்ந்து தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும் அதனால் தான் என் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வீரலிங்கசெட்டியார் சேர்ந்து கிரையம் பெற்றிருந்தால் எங்களுக்கு தனித்து பாத்தியம் கிடையாது என்றால் வீரலிங்கசெட்டியார் வாங்கவில்லை. 1905 ஆண்டு கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 5

ஆவணத்தில் 1905 வருட கிரையப்பத்திரத்தில் சங்கரலிங்கசெட்டியார், வீரலிங்கசெட்டியார், வீரபத்திரசெட்டியார் ஆகியோர்கள் கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்திலும், எதிருரையிலும் எந்த தேதியில் யாரிடமிருந்து கோபுரம்தாங்கிவீரபத்திரசெட்டியார் தனித்து கிரையம் வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1920 ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சங்கரலிங்கசெட்டியார், வீரலிங்கசெட்டியார், வீரபத்திரசெட்டியார் ஆகியோர்களின் செட்டில்மெண்டு ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. தர்மகாரியத்திற்காக ஒரு செட்டிமெண்டு ஏற்படுத்தப்பட்டது என்றும் அது எனக்கு தெரியாது என்பதால் தான் அது சம்மந்தமான விவரங்களை நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரிதான். 1920 ஆண்டு செட்டில்மெண்டு ஆவணத்தின்படி தர்மகாரியம் நடத்தப்படுகிறதா என்றால் என் முன்னோர்கள் நடத்தி வந்துள்ளார்கள். சுந்தர்விநாயகர் கோவில் மடத்தின் டிரஸ்டு இருந்ததா என்றால் இருந்தது. அந்த நிர்வாகத்தில் தீர்மானம் போடும் வழக்கம் உண்டா என்றால் தெரியாது. பொதுவாக டிரஸ்டில் இருக்கும் ஒருவர் மட்டும் எல்லாரின் அனுமதி இல்லாமல் விற்பனை செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எங்களின் முன்னோர்களில் ஒருவர் மட்டும் தானமாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 1920 ஆண்டு பத்திரத்தில் கிரையம் மற்றும் ஒத்தி செய்ய கூடாது என உள்ளது பற்றி எனக்கு தெரியும் என்றும் தற்போது அதை படிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29.07.1956 அன்று ஏற்படுத்தப்பட்ட செட்டிமெண்டு பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் ஸ்ரீதார்மனைஅம்பலம் ஊர்பொதுவிற்காக என்று எழுதி வைக்கப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. ஸ்ரீதார்மனைஅம்பலம் ஊர்பொது என்று எந்த ஒரு டிரஸ்டும் கிடையாது என்றால் சரிதான். தலமனைஅம்பலம் என்று டிரஸ்ட் தான் உள்ளது. 1956 ஆண்டு செட்டில்மெண்டு ஆவணத்தில் கோபுரம்தாங்கிவீரபத்திரசெட்டியார் கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்பதால் தான் நான் அவரின் கிரைய சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரிதான். முந்தைய ஆவணங்களை படித்து பார்க்காமல் தான் 1956 ஆண்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. 9,10 பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை கேட்டுள்ளது பற்றி தெரியாது. எதிர்கோரிக்கை என்ன என்று

தெரியாது என்பதால் தான் நான் அதை பற்றி மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அருள்மிகு சுந்தர்விநாயகர் கோவில் மடம் டிரஸ்ட் சொத்தை நிர்வாகம் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை :** ( 11, 12 பிரதிவாதிகள் தரப்பில்)

11, 12 பிரதிவாதிகள் 1ம் வாதியின் மனைவி மற்றும் மகள் என்றால் சரிதான். அவர்கள் வீரலிங்கசெட்டியாரின் வகையறாவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 4,5,6 பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிர்வழக்குரை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. வாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் என்னஎன்ன ஆவணங்கள் மற்றும் எத்தனை ஆவணங்கள் போடப்பட்டுள்ளது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. எங்கள் தரப்பில் நான் வாக்குமூலம் மட்டும் தாக்கல்செய்துள்ளேன் என்றும் இதர ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு சங்கதிகள் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கோரிக்கை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :** ( 7ம் பிரதிவாதி தரப்பில்)

இல்லை.

**குறுக்கு விசாரணை :** ( வாதிகள் தரப்பில்)

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.